


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று முன்தினம் (12.12.2025) சென்னை, நேரு உள்விளையாட்டரங்கத்தில், தமிழ்நாடு அரசு பெண்களுக்காகச் செயல்படுத்தும் பல்வேறு முன்னோடித் திட்டங்களின் சாதனைகள், பெண்களின் முன்னேற்றத்திற்காக அரசு மேற்கொண்ட முன்னெடுப்புகளை எடுத்துக்காட்டும் “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தமிழ்நாட்டின் சாதனைப் பெண்களின் மாபெரும் வெற்றிக் கொண்டாட்டம் நிகழ்ச்சியில், தையல் தொழில் செய்து வரும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர் செல்வி சாரா, முதலமைச்சர் அவர்களுக்கு, தான் எம்பிராய்டரி செய்து தயாரித்த “அப்பா” என்ற எழுத்துடன்கூடிய கைக்குட்டையை வழங்கினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று முன்தினம் (12.12.2025) சென்னை, நேரு உள்விளையாட்டரங்கத்தில், தமிழ்நாடு அரசு பெண்களுக்காகச் செயல்படுத்தும் பல்வேறு முன்னோடித் திட்டங்களின் சாதனைகள், பெண்களின் முன்னேற்றத்திற்காக அரசு மேற்கொண்ட முன்னெடுப்புகளை எடுத்துக்காட்டும் “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தமிழ்நாட்டின் சாதனைப் பெண்களின் மாபெரும் வெற்றிக் கொண்டாட்டம் நிகழ்ச்சியில், 16 இலட்சத்து 94 ஆயிரத்து 339 மகளிர் பயன்பெறும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் 2–ஆம் கட்ட விரிவாக்கத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, 10 மகளிர்க்கு உரிமைத் தொகைக்கான வங்கிப் பற்று அட்டைகளை (ATM Cards) வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# ‘திராவிட மாடல்’ அரசின் முத்திரைத் திட்டங்களால் மகளிர் பொருளாதாரம் உயர்வு!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

அரசு சாத்தியப்படுத்தியிருக்கிறது! இந்த வளர்ச்சியில் மகளிருக்கான பங்கு நிச்சயம் கிடைக்க வேண்டும் என்று நினைத்தேன்!

கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் இதுவரைக்கும் – ஒரு கோடியே 13 இலட்சத்து 75 ஆயிரத்து 492 சகோதரிகளுக்கு மாதா மாதம் ஆயிரம் ரூபாய் என்று இதுவரைக்கும் 28 ஆயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறோம்! எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்று சொன்னேன். அதற்காக, மக்களுடன் ஸ்டாலின் முகாம்கள் மூலமாக, விடுபட்ட மகளிரும் விண்ணப்பிக்கலாம் என்று அறிவித்து இன்றைக்கு காலையில், 16 இலட்சத்து 94 ஆயிரத்து 339 பேருக்கு அக்கவுண்ட்டில் ஆயிரம் ரூபாய் போட்டுவிட்டோம்! இனிமேல், தமிழ்நாட்டில் இருக்கும்

ஒரு கோடியே 30 இலட்சத்து 69 ஆயிரத்து 831 சகோதரிகளுக்கு ஆயிரம் ரூபாய் மாதா மாதம் தொடர்ந்து கிடைக்கும்!

> தலைநிமிரும் தமிழ்நாட்டில், பெண்கள் உயர்ந்து நடைபோட, நிச்சயம் உரிமைத்தொகையும் உயரும்! பெண்களின் உரிமையும் உயரும்! உறுதியாக சொல்கிறேன்... எதிர்காலத்தில் வரலாற்று ஆசிரியர்கள் வரலாற்றை எழுதும்போது, “மகளிர் முன்னேற்றத்தின் புதிய அத்தியாயத்தை ஸ்டாலினுடைய திராவிட மாடல் ஆட்சியில் தொடங்கியது” என்றுதான் எழுதுவார்கள்!

தலைநிமிரும் தமிழ்நாட்டில், பெண்கள் உயர்ந்து நடைபோட, நிச்சயம் உரிமைத்தொகையும் உயரும்! பெண்களின் உரிமையும் உயரும்! உறுதியாக சொல்கிறேன்... எதிர்காலத்தில் வரலாற்று ஆசிரியர்கள் வரலாற்றை எழுதும்போது, “மகளிர் முன்னேற்றத்தின் புதிய அத்தியாயத்தை ஸ்டாலினுடைய திராவிட மாடல் ஆட்சியில் தொடங்கியது” என்றுதான் எழுதுவார்கள்! இந்த உரிமைத்தொகை உங்களின் உயர்வுக்கு மட்டுமல்ல – உங்கள் மகள்களின் – மகன்களின் கல்விக்குப் பயன்பட வேண்டும் என்று விரும்புகிறேன்!

கல்விதான் சிறந்த முதலீடு! யாராலும் அழிக்க முடியாத சொத்து! தலைமுறைகள் தழைக்க பெண்கள் முன்னேற்றமும், அதற்கு பெண் கல்வியும் அவசியம்! நீங்கள் முன்னேறி வந்து, சிறகடித்து பறக்க வேண்டும்! ஆணும், பெண்ணும் சரிநிகர் என்று சாதனைகள் படைக்க வேண்டும்! அதற்கு, உங்கள் சகோதரனாக – உங்கள் குடும்பத்தில் ஒருவனாக இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்றைக்கும் இருப்பேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### ‘திராவிட மாடல்’ காலம் என்பது

## மகளிர் முன்னேற்றத்தின் பொற்காலம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

*சென்னை, டிச.14 -*

*திராவிட மாடல் காலம் என்பது (Dravidian Era) என்பது மகளிர் முன்னேற்றத்தின் பொற்காலம் (Golden Era) என வரலாறு பதிவு செய்யும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ நிகழ்ச்சி தொடர்பாக வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில் பதிவிட்டுள்ளார்.*

**திராவிட மாடலால் # வெல்லும்_தமிழ்ப்_பெண்கள்: மெய்சிலிர்க்க வைத்த மேடை பன்னாட்டுத் தொழிற்சாலைகளின் உற்பத்தியில் முன்னிற்பது, பேருந்துகளை இயக்குவது, # ISRO-வில் செயற்கைக்கோளை ஏவுவது, மருத்துவமனைகளில் உயிர்காப்பது, கல்வியிலும் விளையாட்டிலும் சாதிப்பது, அரசின் உயர் பொறுப்புகளை நிர்வகிப்பது என எங்கும் நீக்கமற நிறைந்து, தமிழ்நாடு எனும் சக்கரத்தைச் சுழல வைப்பது பெண் எனும் பேராற்றலே! # DravidianModelEra என்பது மகளிர் முன்னேற்றத்தின் Golden Era என வரலாறு பதிவு செய்யும்! என் சகோதரிகளுக்கான எனது திட்டங்கள் # DravidianModel 2.0-விலும் தொடரும்!**

*இவ்வாறு சமுக வலைதளத்தில் முதல்வர் அவர்கள் பதிவிட்டுள்ளார்.*

### கேரளா உள்ளாட்சித் தேர்தல்:

## காங்கிரஸ், இடதுசாரி முன்னிலை!

### பா.ஜ.க.வுக்கு கடும் பின்னடைவு!

*திருவனந்தபுரம், டிச.14-*

*கேரளா உள்ளாட்சித் தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி நடைபெற்று வரும் நிலையில், காங்கிரஸ் மற்றும் இடதுசாரி கட்சிகள் முன்னனிலையில் உள்ளன. அதேநேரம் பா.ஜ.க.வுக்கு கடும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.*

*கேரளாவில் இரண்டு கட்டங்களாக நடைபெற்ற உள்ளாட்சித்தேர்தலில் பதிவான வாக்குகள் காலை 8 மணி முதல் எண்ணப்பட்டு வருகின்றன. உள்ளாட்சித் தேர்தலில் அதிக இடங்களில் காங்கிரஸ் கூட்டணி முன்னிலையில் உள்ளது.*

*கேரளாவில் உள்ள கொல்லம், திருச்சூர், கோழிக்கோடு, கண்ணணூர் உள்ளிட்ட 6 மாநகராட்சிகளில் காங்கிரஸ் கூட்டணி 4 மாநகராட்சிகளை கைப்பற்றியது. மொத்தமுள்ள 86 நகராட்சிகளில் 48 இடங்களில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக கூட்டணி முன்னிலையில் உள்ளது. ஆளும் இடதுசாரி கூட்டணி 30 நகராட்சிகளில் முன்னிலை பெற்றுள்ளது. 14 மாவட்ட பஞ்சாயத்துகளில் காங்கிரஸ் ஏழு இடங்களிலும், இடதுசாரி கூட்டணி ஐந்து இடங்களிலும் முன்னிலையில் உள்ளது. 6 மாநகராட்சிகளில் காங்கிரஸ் 3, இடதுசாரிகள் 2 இடங்களில் முன்னிலை வகிக்கின்றன. 152 ஊராட்சி ஒன்றியங்களில் காங்கிரஸ் கூட்டணி 69 இடங்களிலும், இடதுசாரி கூட்டணி 64 இடங்களிலும் முன்னிலையில் உள்ளது.*

*கேரள உள்ளாட்சித் தேர்தலில் பாஜக கூட்டணி 2 நகராட்சி, ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் மட்டுமே முன்னிலையில் உள்ளது. கேரள உள்ளாட்சித் தேர்தலில் பாஜக கூட்டணி மாநகராட்சி, மாவட்ட பஞ்சாயத்துகளில் கடும் பின்னடைவை சந்தித்துள்ளது.*

### நெல்லை கிழக்கு மாவட்டத்தில்

## தீவிர வாக்காளர் சரிபார்ப்பு பணியாற்றியவர்களுக்கு நன்றி!

### மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் அறிக்கை!

*நெல்லை, டிச.14-*

*நெல்லை கிழக்கு மாவட்டம் இராதாபுரம், நாங்குநேரி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மற்றும் (BLA) (BLA2) (BLC) ஆகியோருக்கு நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

*அதில் அவர் கூறியிருப்பதாவது.*

*திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஒவ்வொரு வாக்*



*கும் மிகவும் முக்கியம் என்பதை உணர்ந்து (SIR) பணிகளை சிறப்பாக செய்த தங்கள் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்துக் கொள்கிறேன்.*

*தேர்தல் ஆணையம் மூலம் தற்போது நடைபெற்று வரும் தீவிர வாக்காளர் சிறப்பு சீர்திருத்தப் பணிகளில் புதிய தகுதியுடைய வாக்காளர்களாக 01.01.2026 ம் தேதி 18 வயது பூர்த்தியாகும் அனைவரும் வாக்காளர் பட்டியலில் இடம் பெறுவதற்கும், அவர்களது ஜனநாயக கடைமைகளை ஆற்றுவதற்கு ஏதுவாக நெல்லை கிழக்கு மாவட்டத்தில் அடங்கியுள்ள இராதாபுரம் மற்றும் நாங்குநேரி சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட தொகுதி பார்வையாளர்கள், ஒன்றிய,நகர,பேரூர் செயலாளர்கள், (BLA 2) (BLC) (BDA) ஆகியோர் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும்,ஏற்கனவே உள்ள வாக்காளர்கள் பட்டியலில் இடம் பெற்ற விபரங்களை சரிபார்த்து பதிவேற்ற உதவியது போலவே, புதிய வாக்காளர்களை பட்டியலில் இடம் பெறச் செய்வதற்கு உரிய படிவத்தினை நிரப்பி சமர்ப்பிப்பதற்கு உதவி செய்திடவும் கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் கூறியுள்ளார்.*

### தி.மு.க. இளைஞர் அணி – வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு!

## திராவிட வழித்தோன்றல்களே! திருவண்ணாமலைக்குத் திரண்டு வருக!

**சென்னை, டிச. 14 -**


**திருவண்ணாமலையில் இன்று, வடக்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு நடைபெறுவதையொட்டி கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், “கழக இளைஞர் அணியின் வடக்கு மண்டல இளைஞர் அணிச் சந்திப்பு நிகழ்வுக்கு, திராவிட வழித்தோன்றல்களே! திருவண்ணாமலை நோக்கித் திரண்டு வாரீர்!” என, அன்பழைப்பு விடுத்துள்ளார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

தமிழ்நாட்டின் தலைமகன், நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்ற மாநிலங்களவையில் பேசும்போது, “I belong to the Dravidian Stock” என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்டார்.

திருவண்ணாமலைக்கு வரும் தி.மு.க. இளைஞர் அணியின் வடக்கு மண்டலத்தின் New Dravidian Stock, you are welcome!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



## திருப்பரங்குன்றம் விவகாரத்தில் தவறான தகவலைக் கூறிய பா.ஜ.க. எம்.பி.!

### தமிழ்ப் பேராசிரியர்கள் கண்டனம்!

*சென்னை, டிச. 14 -*

*திருப்பரங்குன்றம் விவகாரத்தில் தவறான தகவலை கூறிய பா.ஜ.க. எம்.பி.யின் அனுராக் தாக்கூரின் பேச்சுக்கு பக்தர்கள், தமிழ்ப் பேராசிரியர்கள் உள்ளிட்டோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.*

*திருப்பரங்குன்றம் வழக்கில் நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் வழங்கிய தீர்ப்பு சமூக பாதுகாப்பை சீர்குலைப்பதாக உள்ளதாக கடும் விமர்சனம் எழுந்தது. இதையடுத்து, தமிழ்நாடு முழுவதும் நீதிபதிக்கு எதிராகவும், அவரை பதவிநீக்கம் செய்ய வலியுறுத்தியும் போராட்டங்கள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், தொடர்ந்து சர்ச்சைக்குரிய தீர்ப்புகளை வெளியிட்டு வரும் உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனை பணிநீக்கம் செய்ய வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் இந்தியா கூட்டணி கட்சிகள் இம்பீச்மெண்ட் நோட்டீஸ் வழங்கியுள்ளன. இந்த விவகாரம் தொடர்பாக, நாடாளுமன்றத்தில் பேசிய பா.ஜ.க. எம்.பி. அனுராக் தாகூர், திருப்பரங்குன்றம் விவகாரத்தில் இந்துக்கள் மீது தடியடி நடத்தப்பட்டதாக தவறான தகவலை கூறினார். இந்நிலையில், பா.ஜ.க. எம்.பி.யின் தவறான கருத்துக்கு தமிழ்ப் பேராசிரியர்கள், பக்தர்கள் உள்ளிட்டோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.*